Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC NO.241/20**16**

**Depostitions of PW- 10 Witness for**

| | |
|---|---|
| Name | திரு.சுந்தரபாண்டியன், காவல் ஆய்வாளர் |
| Father's name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of January 2024.

Signature of Witness.

11.01.2024

எதிரிகள் ஆஜர்

**முதல் விசாரணை–**

நான் தற்போது சிவகங்கை மாவட்டம் நெற்குப்பை காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.9.2014 அன்று திருவில்லிபுத்துர் நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த திரு. பக்தவச்சலம் நிலைய பொறுப்பிலிருந்தபோது கம்மாபட்டி கீழத்தெருவை சேர்ந்த கோவிந்தசாமி மகன் காளியப்பன் என்பவர் நிலையம்ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அந்த புகார மனுவின் தன்மைக்கேற்ப நிலைய கு.எண்.542/2014 பிரிவுகள் 392 இதச மற்றும் பிரிவு 27 ஆயுத சட்டத்தின் படி வழக்கு பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் புலன் விசாரணைக்காக வழக்கு

கோப்புகளை எனது பார்வைக்கு சமர்பித்து அதை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 20.9.2014 ம்தேதி 11.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முனியராஜ், பாஸ்கரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். சம்பவ சாட்சிகளான கோட்டூர் குருசாமி, ராமதீர்த்தம்,. முனியராஜ், பாஸ்கரன், மற்றும் சார்பு ஆய்வாளர் பக்தவச்சலம் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்துள்ளேன். பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் 20.9.2014 ம்தேதி 15.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் மடவார்வளாகம் பஸ் நிறுத்தம் அருகே நான் மற்றும் சார்பு ஆய்வாளர் பக்தவச்சலம் போலிஸ் பார்ட்டி சகிதம் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சிவப்பு கருப்பு கலர் கலந்த டிஎன் 67 ஏடி 6912 என்ற பதிவு எண் கொண்ட யமகா இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த ராஜபாளையத்தை சேர்ந்த ராமசாமி மகன் ரவிக்குமார் என்பவரை நிறுத்தி விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தை சாட்சிகள் முனியாண்டி மற்றும் குப்புசாமி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தின் அடிப்படையில் 1ம் எதிரியிடமிருந்து டிஎன் 67 ஏடி 6912 என்ற பதிவெண் கொண்ட யமகா இரு சக்கர வாகனத்தையும் மற்றும் மர கைப்பிடியுடன் கூடிய இரும்பு பூண் உள்ள கத்தி ஒன்றும், சுமார் 12 கிராம் எடையுள்ள பட்டை மாடல் தங்க செயின் ஒன்றையும் அத்தாட்சியின் பேரில் கைப்பற்றினேன். பின்னர் 1ம் எதிரி ரவிகுமாரை கைதுக்கான காரணத்தை கூறி கைது செய்து வழக்கு சொத்துக்களுடன் நிலையம் கொண்டு வந்து பாரா வசம்ஒப்படைத்து தக்க வழிக்காவலடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளளேன். 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 21.9.2014 ம்தேதி 17.00 மணிக்கு திருவில்லிபுத்தூர் ஆண்டாள் தியேட்டர் சந்திப்பில் நானும் சார்பு ஆய்வாளர் பக்தவச்சலம் மற்றும் போலிஸ் பார்ட்டி சகிதம் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி

வந்த வெள்ளை கலர் டிஎன் 09 ஏஎஸ். 2012 என்ற எண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த ராஜபாளையத்தை சேர்ந்த பாலசுப்பிரமணியன் மகன் முருகேசன் என்பவரை விசாரித்ததில் அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தினை சாட்சிகள் ஈஸ்வரன், காளிஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் எதிரி முருகேசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தின் அடிப்படையில் எதிரி முருகேசன் அவரது வீட்டின் மேற்கு பக்க தாழ்வாரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கை துப்பாக்கி ஒன்றையும் பித்தனை கூம்பு வடிவ தோட்டாக்கள் மூன்றையும், காலி தோட்டா ஒன்றையும், அத்தாட்சியின் பேரில் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். பினனர் எதிரி முருகேசனிடமிருந்து டிஎன் 09 ஏஎஸ் 2012 எண் கொண்ட ஹோண்டா ஆக்டிவா இரு சக்கர வாகனத்தை அத்தாட்சியின் பேரில் கைப்பற்றினேன். எதிரி முருகேசனிடமிருந்து கைப்பற்றபட்ட சொத்துக்களோடு எதிரியை நிலையம் கொண்டு வந்து பாரா வசம் ஒப்படைத்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். எதிரி முருகேசனிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட துப்பாக்கியை மாநில தடய அறிவியல் துறை சென்னை மயிலாப்பூருக்கு நீதிமன்றம் மூலம் ஆய்வறிக்கைக்கு அனுப்பப்பட்டது. அதன்படி வல்லுநர் மேற்படி துப்பாக்கியை ஆய்வு செய்து ஆய்வறிக்கை வழங்கியுள்ளார். பின்னர் நான் பணி மாறுதலாகி வேறு காவல் நிலையம் சென்று விட்டதால் வழக்கு கோப்புகளை ஆய்வாளர் திரு. வேணுகோபால் பார்வைக்கு சமர்ப்பித்தேன். அவரும் வழக்கு கோப்புகளை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை விசாரணை செய்ததில் சாட்சிகள் என்னிடம் சொன்னதையே அவரிடம் சொன்னதால் தனியாக வாக்குமுலங்கள் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்த சட்ட பிரிவுகள் 392 இதச மற்றும் பிரிவு 27 ஆயுத சட்டமாக இருந்ததை பிரிவுகள் 341,392,34 இதச உ/இ பிரிவு 3(1) மற்றும் பிரிவு 25(1B)

(a) படைகல சட்டமாக சட்ட பிரிவுகளை மாற்றம் செய்து சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். பின்னர் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது 341,392,34 இதச உ/இ பிரிவு 3(1) மற்றும் பிரிவு 25(1B) (a) படைகல சட்டமாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். வரைபடம் அசாஆ.14 ஆகவும், எதிரி ரவிகுமார் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கபபட்ட பகுதி அசாஆ.15 ஆகவும், யமகா இரு சக்கர வாகனத்திற்கான அத்தாட்சி அசாஆ.16 ஆகவும், கத்தி கைப்பற்றப்பட்ட அத்தாட்சி அசாஆ.17 ஆகவும், செயின் கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சி அசாஆ.18 ஆகவும், படிவம் 91 (4 எண்ணம்) அசாஆ.19 ஆகவும, எதிரி முருகேசன் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ.20 ஆகவும், துப்பாக்கி கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சி அசாஆ.21 ஆகவும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் அனுமதி உத்தரவு அசாஆ.22 ஆகவும், சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.23 ஆகவும், கைதுப்பாக்கி ஒன்று அ.சா.பொ,2 ஆகவும்,தோட்டாக்கள் (3 எண்ணம்) அசாபொ.3 ஆகவும், காலி தோட்டா ஒன்று அ.சா.பொ.4 ஆகவும், மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று அ.சா.பொ.5 ஆகவும், டிஎன் 67 ஏடி 6912 என்ற பதிவெண் கொண்ட யமகா இரு சக்கர வாகனம் அ.சா.பொ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.(அரசு தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணை இத்துடன் நிறுத்தி வைக்கப்பட்டது)